எஸ்.சி. எண்204/2016 கனகலட்சுமி (அசா5) தேதி:30.01.2023

சாட்சி மனுவின்மீது மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை.

இந்த வழக்கில் சாட்சியமளித்த பஞ்சாமிர்தம் எனது சித்தி ஆவார். சாட்சி சுப்புலட்சுமி எனது அம்மா ஆவார். எங்கள் வீட்டிற்கு அருகே நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சிறிது தள்ளி இருக்கிறது. எனது கணவருக்கு உள்ளூர்தான் என்றுசொன்னால்சரிதான். எனது மாமனார் இறந்துவிட்டார் என்றும் எனது மாமியார் இருக்கிறார் என்றுசொன்னால்சரிதான். எனது மாமியார் மற்றும் நான் ஒன்றாக இருக்கிறோம் என்றுசொன்னால் எனது மாமியார் எனது கொளுந்தனார்வீட்டில் இருக்கிறார். நான் எனது பெற்றோர்ரோடு வசித்துவருகிறேன். எங்களுக்கு 2 வீடுகள் உள்ளது. நான் குடியிருக்கும் வீடு கதவு எண்1/93 எனது பெயரில் உள்ளது. மற்றொரு வீடு எனது அப்பாபெயரில் உள்ளது. எனது சித்தி ஊருக்குள் வீடுகட்டி வருகிறார். மேற்படி எனது சித்திகட்டிவரும் வீட்டிற்கு எதிரே எங்களுக்கு வீடு இல்லை. சம்பவத்தின்போது வீடு இருட்டாக இருந்தது என்றால் பீஸ்கேரியர் உருவியதால் இருட்டாக இருந்தது. சம்பவத்திற்கு மறுநாள்காலையில் வீட்டில்வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். அப்போது போலிசார் எதிரியை உடன்அழைத்துவந்தார்கள் என்றால்சரியல்ல. சம்பவத்தின்போது வீட்டில் புளுக்காகமாக இருந்தது என்றும் கரண்ட் இல்லை என்றும் எனவே ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபோது மற்றவீடுகளில் கரண்ட் இருந்தது என்றும், நான் எனது கதவை திறந்தேன் என்றம் போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால்சரிதான். கதவை திறந்தவுடன் எதிரி மிளகாய்பொடியை என்மீது வீசினார் எனவே நான் பலமாக சத்தம்போட்டேன். எனது சத்தம்கேட்டு எனது சித்தப்பாவும் சித்தியும் முதலில் வந்தார்கள். பின்னிட்டு எனது அம்மா மற்றும் தம்பி ஆகியோர்கள் வந்தார்கள். மேலேசொன்னவாறு போலிஸ்விசாரணையில் நான்சொல்லியுள்ளேன். எதிரி கொடுவாளை எடுத்து எனது சித்தப்பாவை வெட்டவந்தார் என்று போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது சித்தப்பாவிற்கு எந்தகையில் காயம்ஏற்பட்டது என்று போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன். பிறகு எனது சித்தப்பாவும் எனது தம்பியும் எதிரியை அடித்து வெளியே விரட்டிவிட்டார்கள் என்றால் பிடித்துவெளியே தள்ளிவிட்டார்கள். கொடுவாளை எதிரியிடம்இருந்து

யார்பிடுங்கினார்கள் என்றால் யாரும்பிடுங்கவில்லை அப்படியே தள்ளிவிட்டோம். நாங்கள் ஆம்புலன்சிற்குதான் தகவல்கொடுத்தோம். போலிஸ் எப்படி வந்தர்ர்கள் என்று எனக்குதெரியாது. விளாத்திகுளம் செல்லவேண்டுமென்றால் காவல்நிலையத்தை தாண்டிதான்செல்லவேண்டும் என்றால்சரிதான். நாகலாபுரத்தில் பெரிய மருத்துவமனை உள்ளது என்றால் சரியல்ல. சின்னமருத்துவமனைதான் உள்ளது. மேற்படி மருத்துவமனையில் எல்லா சிகிச்சைமுறைகளும் கொடுக்கப்படுகிறது என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. எதிரியை அடித்துகாயப்படுத்தியதாக எனது அம்மா, சித்தப்பா, சித்தி ஆகியோர்கள் மீது வழக்குபதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரியை நாங்கள் சேர்ந்து அடித்து காயப்படுத்திவிட்டு எதிரிமீது பொய்புகார்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான்சொன்னதுபோல் எதிரி எங்கள்வீட்டில் பீஸ்கேரியரை உருவவில்லை என்றும், வீட்டிற்குள்வந்து மிளகாய்பொடியை துவவில்லை என்றும், எங்களை தாக்கவில்லை என்றும் சொன்னால்சரியல்ல. எனது அம்மா மற்றும் சித்தப்பா, மற்றும் சித்தி ஆகியோர்களுக்காக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றுசொன்னால்சரியல்ல.s

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி